# உயிர்ப்பு காலத்தின் நான்காம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம் 2:14,36-41,

திருப்பாடல் 23: 1-3a. 3b-4. 5. 6,

திருத்தூதர் பேதுரு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்: 2:20-25,

யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 10: 1-10)

## திருப்பலி முன்னுரை:

"ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டே நான் வந்துள்ளேன்."

இயேசுவுக்குரியவர்களே, உயிர்ப்பு காலத்தின் நான்காம் ஞாயிறான இன்று நாம் நல்லாயன் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். நம் ஒவ்வொருவரையும் அறிந்து வைத்திருக்கும் நல்ல ஆயரான இயேசுவின் குரலுக்கு செவிகொடுத்து வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. வாயில் வழியாக நுழையாமல், வேறு வழியாக ஏறிக் குதிக்கும் திருடரிடமும், கொள்ளையரிடமும் சிக்கிக் கொள்ளாமல், நல்ல ஆயரான இயேசுவின் பாதுகாப்பில் வாழ அழைக்கப்படுகிறோம். ஆட்டுக் கொட்டிலின் வாயிலாக விளங்கும் நம் ஆண்டவரில் நம்பிக்கை வைக்கும்போது, நாம் வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும். நல்ல ஆயரான இயேசுவைப் பின்தொடர்ந்து, நிறைவாழ்வைப் பெற்றுக்கொள்ளும் ஆடுகளாக வாழ வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

## **விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. நல்ல ஆயரே இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், பல்வேறு சபைகளாக பிரிந்து வாழும் கிறிஸ்தவர்களை உமக்கு உகந்த ஒரே மந்தையாக ஒருங்கிணைக்க உதவு மாறு உம்மை மன்றாடுகிறோம்.

**2. உண்மை ஆயரே இறைவா,**

தவறானவற்றை தெய்வங்களாக கருதி வழிபடும் மக்கள் அனைவரும், நீர் ஒருவரே கடவுள் என்பதை அறிந்து மனம் திரும்பவும் உமது மந்தையில் ஒன்றிணையவும் உதவு மாறு உம்மை மன்றாடுகிறோம்.

**3. இரக்கத்தின் ஊற்றே இறைவா,**

உலகத்தின் கவலைகளுக்கும், துன்பங்களுக்கும் தீர்வு தேடி அலையும் மக்கள் அனைவரும், உம் வழியாக அமைதி காணவும், நீரே உண்மையான கடவுள் என்பதை உணரவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**4. அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!**

எங்களை பராமரித்து பாதுகாத்த எம் பெரியவர்கள் இன்று ஆதரவின்றி, அனாதைகளாக்கப்பட்டு, தெரு ஒரங்களிலும், பேருந்து நிலையங்களிலும் முதியோர் இல்லங்களிலும் தனித்து விடப்பட்டு, அவர்கள் படும் வேதனைகள் தொடர் நிகழ்வாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே அவர்கள் உம் இறை இரக்கத்தினால், பாதுகாப்புடன் வாழ, இத்தலைமுறையினர் பெரியவர்கள் மேன்மையை உணர்ந்து அவர்களை பாதுகாக்க தேவையான அருளை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. நேரிய ஆயரே இறைவா,**

பணம், பதவி, போதை, வன்முறை ஆகியவற்றின் மீதான ஆர்வத்தால், பிறருடைய நிம்மதியை கெடுப்பவர்கள் அனைவரும், நல்லவர்களாக மனம் மாற உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.